RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 104 | ஏப்ரல்.21 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “ஆர்எஸ்எஸ் பாஜகவுக்கு தமிழர்கள் ஒருபோதும் சரணடைய மாட்டார்கள்”

## குளச்சலில் ராகுல் காந்தி பேச்சு

கன்னியாகுமரி: ஏப்.21-

“திராவிட சித்தாந்தத்தை வெறுக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தையும் சித்தாந்தத்தையும் ஒருபோதும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; அதற்கு சரணடைய மாட்டார்கள் என்று அவர்களுக்கு தெரியும். அதனால் தான் அதிமுகவின் மூலம் தமிழகத்தில் கால் பதிக்க நினைக்கிறார்கள்.” என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் ராகுல் காந்தி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசும்போது, “அனைத்து மாநிலங்களின் மொழி, கலாச்சாரம் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். தனிப்பட்ட மொழி, வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், உரிமைகள் சிதைக்கப்பட கூடாது. தமிழ் மொழிக்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது.

பாஜக ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே வரலாறு இருக்க வேண்டும் என நினைக்கிறது. கூட்டாட்சி தத்துவத்தை பலவீனம் ஆக்க பாஜக முயற்சி செய்து வருகிறது. டெல்லியில் இருந்து தமிழகத்தை ஆள நினைக்கிறது.

மணிப்பூரில் என்ன செய்தது பாஜக?. அமைதியான



மாநிலத்தில் இன்னும் உள்நாட்டு போர் நடந்து கொண்டு இருக்கிறது. நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதாவை தோற்கடித்துள்ளோம்.

தமிழகம் இந்தியா முழுமைக்கும் ஒரு முற்போக்கான பார்வையை கொடுத்துள்ளது. பிளவுவாத அரசியலை வளர்க்கும் பாஜக, ஆர்எஸ்எஸை எதிர்த்துப் போராடுவதே நம் அரசியல் களம். எங்கெல்லாம் வாய்ப்பு உள்ளதோ அங்கெல்லாம் டெல்லியில் இருந்து ஆட்சி செய்ய விரும்புகிறது பாஜக. ஆனால் நாங்கள் தமிழகத்தை தமிழகத்தில் இருந்துதான் ஆள வேண்டும் என நினைக்கிறோம்.

தமிழகத்தில் நீண்ட கால வரலாறு உள்ள இயக்கத்தை (அதிமுக) பாஜக கைப்பற்றி இருக்கிறது. அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சிக்கு பெரிய பங்காற்றி இருக்கிறார்கள். அதிமுக மூலம் தமிழகத்தில் கால்பதிக்க பாஜக முயற்சி செய்து வருகிறது.

தற்போதைய அதிமுக வெற்று கூடாக மாறியிருக்கிறது. தற்போது அதிமுக, பாஜக தமிழகத்தில் நுழைவதற்கான கருவியாக மாறிப் போய் இருக்கிறது. பிரதமர் மோடியை ட்ரம்ப் கட்டுப்படுத்தி இருப்பதைப் போல, மோடியும் அதிமுகவை கட்டுப்படுத்த நினைக்கிறார்.

நான் ஒவ்வொரு முறையும் தமிழகம் வரும்போது காமராஜரை நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

திராவிட சித்தாந்தத்தை வெறுக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தையும் சித்தாந்தத்தையும் ஒருபோதும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; அதற்கு சரணடைய மாட்டார்கள் என்று அவர்களுக்கு தெரியும். அதனால் தான் அதிமுகவின் மூலம் தமிழகத்தில் கால் பதிக்க நினைக்கிறார்கள். அதிமுகவின் தற்போதைய தலைவர்கள் ஊழலில் திளைத்த காரணத்தினால் மோடியிடம் சரண் அடைத்துவிட்டனர்” இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், தமிழ்நாடு அரசின் 5 ஆண்டுகால திட்டங்கள் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பட்டியலிட்டுப் பேசினார் ராகுல் காந்தி.

## மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, தி.நகர் திமுக வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் வாக்கு சேகரிப்பு

சென்னை: ஏப்.21-

சென்னையில் மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, தி.நகர் தொகுதி திமுக வேட்பாளர்களை ஆதரித்து எல்டாம்ஸ் சாலை முதல் தி.நகர் வரை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சாலைவலம் நடத்தி வாக்கு சேகரித்தார்.



சென்னை போட்டியிடும் திமுக வேட்பாளர்களை ஆதரித்து ஆழ்வார்ப்பேட்டை எல்டாம்ஸ் சாலை முதல் தி.நகர் வரை முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று சாலை வலம் (ரோடு ஷோ) வந்தார். முதலாவதாக மயிலாப்பூர் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் த.வேலுவை ஆதரித்து எல்டாம்ஸ் சாலையில் ரோடு ஷோ நடத்தினார்.

அவர் வருகை தந்த வழியெங்கும், சாலையில் இருபுறம் பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நின்று அவருக்கு மலர் தூவி பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். ரோடுஷோவில் தொகுதி வேட்பாளர்களுடன் வலம் வந்த முதல்வர் ஸ்டாலின், வாகனத்தில் நின்றவாறு பொதுமக்களை பார்த்து கையசைத்தவாறு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது தொண்டர்களும், பொதுமக்களும் வழங்கிய பரிசு பொருட்களையும் அவர் வாங்கிக் கொண்டார். மயிலாப்பூர் பரப்புரையில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், “மயிலாப்பூர் தொகுதியில் த.வேலு ஏற்கெனவே சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து எப்படியெல்லாம் பணியாற்றி இருக்கிறார் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும்.

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரக்கூடிய சேவகனாக, ஒரு தொண்டனாக, உங்கள் வீட்டு பிள்ளையாக இருந்து அவர் பணியாற்றிய பாங்கை பார்த்து நானே வியந்திருக்கிறேன், பாராட்டியிருக்கிறேன்.

ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக மயிலை வேலு திகழ்ந்திருக்கிறார். அதனால் தான் அவரை மீண்டும் வேட்பாளராக தேர்வு செய்து நிறுத்தியிருக்கிறேன். எனவே, உதய சூரியனுக்கு நீங்கள் ஆதரவு தந்து, மயிலை த.வேலுவை பெரியளவிலான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

இதனைத்தொடர்ந்து ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடும் எழிலன் நாகநாதனையும், தி.நகர் தொகுதியில் போட்டியிடும் ராஜா அன்பழகனையும் ஆதரித்து ஆயிரம் விளக்கு தாமஸ் சாலை, தி.நகர் பர்கிட் சாலை வழியாக ரோடு ஷோவில் வலம் வந்தார்.

வழிநெடுகிழும் பொது மக்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர், பரப்புரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், “சென்னையையும், என்னையையும் யாராலும் பிரிக்க முடியாது.

அடுத்த 2 நாட்கள் சென்னையில் தான் தெரு, தெருவாக சென்று வாக்கு சேகரிக்க போகிறேன். வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலிலும் 200க்கும் மேலே வெற்றிபெறுவோம் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் 234 தொகுதிகளிலும் வெற்றிபெற்றால் அதில் ஆச்சரியம் இல்லை. அது வந்தால் தான் நம்மை கண்டு பயப்படுவார்கள். இல்லையென்றால் தமிழகத்தை குட்டிச் சுவராக்கி விடுவார்கள்” என்று பேசினார்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ரேபிடோ இணைந்து சென்னை நேப்பியர் பாலம் அருகில் இருந்து 300 இருசக்கர மோட்டார் வாகனங்கள் பங்கேற்புடன் நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியினை சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஆர்.சுகந்தி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ரேபிடோ நகர மேலாளர்கள் திரு.கிருஷ்ணராஜன், திரு.எஸ்.யஷ்வந்த்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் நிறைவுற்றதும் அமலுக்கு வரும் விதிமுறைகள் என்னென்ன?

சென்னை: ஏப்.21-

தமிழகத்தில் இன்று (ஏப்.21) மாலை 6 மணியோடு பிரச்சாரம் முடிவடைந்த உடன், அமலுக்கு வரும் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார்.




தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் 4 முனைப் போட்டி நிலவுவதாக கூறப்படுகிறது. தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் கடைசி நேர சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், ஏப்.21 மாலை 6 மணியோடு பிரச்சாரம் முடிவடைந்த உடன், அமலுக்கு வரும் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். அதன் விவரம்:

2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்.23 ஆம் தேதி காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். ஏப். 21 ஆம் தேதி மாலை 6.00 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126ன் கீழ், பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்.

தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக் கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது.

யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப்.எம். ரேடியோ, வாட்ஸ்அப், முகநூல், ட்விட்டர் போன்ற அல்லது இது போன்ற சாதனம் வாயிலாகப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

பொது மக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித ஏதேனும் பிற கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் யாதொரு தேர்தல் விவகாரத்தையும் யாதொரு நபரும் பரப்புரை செய்யக் கூடாது. இந்த விதிமுறை மற்றும் மேற்கண்ட இரண்டு விதிமுறைகள் எவ்விதத்தில் மீறப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)ன்படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

தொகுதி வெளியேயிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் ஏப். 21 ஆம் தேதி அன்று மாலை 6.00 மணிக்கு மேல் அத்தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.

கல்யாண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்டறியப்படும்.

வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், ஏப்.21ஆம் தேதி மாலை 6.00 மணி முதல் செயல்திறனற்றது ஆகிவிடும்.

சட்டமன்றத் தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப்பதிவு நாளன்று வாகன அனுமதி பின்வருமாறு:

அவரது சொந்த பயன்பாட்டிற்கான ஒரு வாகனம், தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்கான சட்டப்பேரவைத் தொகுதிக்கு ஒரு வாகனம் மற்றும் தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டிற்கான ஒரு வாகனம் என மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் அனுமதி தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும், வாக்குச் சாவடிகளிலிருந்து அழைத்துச் செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது வாங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எந்தவொரு வேட்பாளரும் அனுமதிக்கக்கூடாது. இது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும்.

இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட, வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளின் தேர்தல் அலுவலகம் வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர்கள் தொலைவிற்கு வெளியே அமைக்கப்படலாம். தேவையில்லாத கூட்டத்தை அவர்கள் அனுமதிக்கக் கூடாது.

## விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து: சிறப்பு விசாரணை அதிகாரி நியமனம்

விருதுநகர்: ஏப்.21-

விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் நேற்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 25 பேர் உயிரிழந்தது தொடர்பாக விசாரணை நடத்த சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.



விருதுநகர் அருகே உள்ள கட்டனார் பட்டியல் நேற்று மாலை ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் 25 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இச்சம்பவம் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி, தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் தங்களது இரங்களை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கோவிந்த ராவ் என்பவரை சிறப்பு விசாரணை அதிகாரியாக தமிழக அரசு நியமித்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு அவர் விருதுநகர் வந்தார்.

நேற்று காலை விபத்து நடந்த பட்டாசு ஆலையை நேரில் சென்று பார்வையிட்ட சிறப்பு அதிகாரி, விசாரணை நடத்தினார். அதைத் தொடர்ந்து விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சுகபுத்திரா முன்னிலையில் பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்று பேசினார். அப்போது பட்டாசு தொழிலில் விபத்துகள் ஏற்படாத வகையில் பாதுகாப்பாக நடத்தவும் தொழிலாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கவும் அறிவுறுத்தினார்.

அதைத் தொடர்ந்து இந்த பட்டாசு ஆலை வெடி விபத்தில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருபவரை விருதுநகர் அரசு மருத்துவமனையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்தும் காயம் அடைந்த நபர்களிடம் விசாரணை மேற்கொண்டார். பின்னர் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

தேர்தல் காலம் என்பதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி நிவாரணம் விரைவில் வழங்கப்படும் என்பது குறித்தும் பாதிக்கப்பட்டவர்களிடம் எடுத்துக் கூறினார். இந்த நிகழ்வின்போது சிறப்பு அதிகாரியுடன் மாவட்ட ஆட்சியர் சுக புத்திரர், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.






■ நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோண்மெண்ட் நகரிய செயளாலர் மார்டின் தலைமையில் நகரிய கழக அலுவலகத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் கண்டோன்மெண்ட் நகரிய நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் இதனை தொடர்ந்து மாலைமாவட்ட தலைமை கழக பேச்சாளர் ஷாகிர் உஷேன் தலைமையில் வரும் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து பாய்ஸ் கம்பெனி, லூர்துபுரம், பாபுவில்லேஜ், மற்றும் வெலிங்டன் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர் இந்த வாக்கு சேகரிப்பு அனைத்து மக்களிடமும் பெறும் வரவேற்பைப் பெற்றது

# உதகை சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் இப்ராஹிமிற்கு உதகை பிங்கர்போஸ்ட்டில் மிக பிரமாண்டமான வரவேற்பு



உதகை ஏப். 21-

நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற தொகுதிதமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் இப்ராஹிம் நீலகிரி கிழக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின்மாவட்ட ஆலோசகர் உதகை டேனி சார்பில் உதகை பிங்கர்போஸ்ட்டில் மிக பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பிறகு உதகை காந்தல் மற்றும் தலைகுந்தா மந்தில் தேர்தல் பிரச்சாரம் மற்றும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் நீலகிரி ஆதிவாசி பழங்குடியினர் தலைவர் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தின் நீலகிரி கிழக்கு மாவட்ட பழங்குடியினர் அணி அமைப்பாளர் திரு தினேஷ் மற்றும் அதன் தலைவர் மற்றும் பழங்குடி யினர் சிறப்பாக வரவேற்பு செய்தனர். இதில் நீலகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பாமா, மாவட்ட கழக இணை செயலாளர் கணேஷ் மாவட்ட கழக பொருளாளர் ராஜேஷ் மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆனந்த் பஷீர்கான் மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் நூர் பரத் சூர்யா முரளிதரன் செந்தில் மண்டல இணை அமைப்பாளர் பீரவிண் மற்றும் மாவட்ட தொழிற்சங்க அமைப்பாளர் தினேஷ் நீலகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் உதகை சூர்யா மற்றும் அதன் நிர்வாகிகள் மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் வினோத் மற்றும் அதன் நிர்வாகிகள் மாவட்ட உறுப்பினர் சேர்க்கை அணி அமைப்பாளர் .எஸ்தர்சுதாகர், மாவட்ட மகளிரணி இணை அமைப்பாளர்கள் சந்தியா மெரீனா சுமித்ரா, மற்றும் பழங்குடி யினர் அணி இணை அமைப்பாளர்கள் நாசில் குட்டன்,ஹாலஸ்குட்டன், உதகை நகர தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மாதவன் மற்றும் அதன் நிர்வாகிகள்மற்றும் உதகை நகர இளைஞர் அணி அமைப்பாளர் செந்தில் மற்றும் அதன் நிர்வாகிகள் உதகை கிழக்கு மற்றும் மேற்கு நகர செயலாளர்கள் ஜெயக்குமார் ரவிக்குமார் மற்றும் அதன் நிர்வாகிகள் மாணவரணி இணை அமைப்பாளர் சந்தோஷ் மற்றும் விவசாய அணி அமைப்பாளர் பாபு இணை அமைப்பாளர் சிவக்குமார் மற்றும் மாவட்ட வழக்கறிஞர்கள் அணி அமைப்பாளர் காமேஷ் மற்றும் நீலகிரி கிழக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முடிவில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை குன்னூர் கூடலூர் ஒருங்கிணைந்த மாவட்ட கழக தேர்தல் பொறுப்பாளர் ரமேஷ் அவர்கள் இவ் விழாவை சிறப்பித்து தந்த உதகை டேனி மற்றும் அவரின் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார்.



# அகஸ்தியா சிலம்ப அகாடமி சிலம்ப மாணாக்கர்கள் உலக சாதனை

மாதவரம், ஏப்.21-

1000த்திற்கும் மேற்பட்டோர்ஒரே நேரத்தில் கண்ணைக் கட்டிக் கொண்டு தொடர்ந்து 30 நிமிடம் சிலம்பம் சுற்றும் நிகழ்வு ஆஸ்கர்ஸ் புக் ஆஃப் ரிக்கார்ட்ஸ் அமைப்பால் உலகசாதனை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி சென்னை வண்டலூர் அடுத்த மேலக்கோட்டையூர் தமிழ்நாடு உடற்கல்வி யியல்மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் புள்ளிலைன் அகஸ்தியா சிலம்ப அகாடமி சார்பில் 23க்கும்மேற்பட்ட மாணவர்கள்கலந்து கொண்டுசாதனை புரிந்தனர். ஆஸ்கர்ஸ் புக் ஆஃப் ரிக்கார்ட்ஸ் சார்பில்சிலம்ப மாணாக்கர்களுக்கு கேடயம், சான்றிதழ், பதக்கங்களும் வழங்கப்பட்டன. அகஸ்தியா சிலம்ப அகாடமி ஆசான் எல்.கார்த்திக் சரணுக்கு சிலம்பம் கலைச்சுடர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. சாதனை புரிந்த மாணாக்கர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் பேண்ட் வாத்தியங்கள் முழங்க செங்குன்றம் அடுத்த புள்ளிலைன் கெங்கையம்மன் கோவில் வளாகத்திலிருந்து புதுநகர் சிலம்ப அகாடமி வரவேற்பளித்தனர். இதில் லயன் லட்சுமி நாராயணன் உள்ளிட்ட மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# பம்மல் வடக்கு பகுதி கழக திமுக சார்பில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அனகை முருகேசன் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு





குரோம்பேட்டை ஏப்.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பகுதி கழக திமுக சார்பில் திமுக கூட்டணியின் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன் அவர்களை ஆதரித்து முரசு சின்னத்திற்கு வாக்களிக்குமாறு திருநீர்மலை பிரதான சாலை, லஷ்மிபுரம், துர்கா நகர் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்குசேகரிக்க சென்ற போது வேட்பாளர் அனகை முருகேசன், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, துனை மேயர் காமராஜ் ஆகியோருக்கு லஷ்மிபுரம் பகுதியில் மாமன்ற உறுப்பினர் ஜெய்குமார் சுந்தரி தலைமையில் வார்டு செயலாளர்கள் பாலாஜி, ஆண்டவர், ஜோசப் ஏற்பாட்டில் வடக்கு பகுதி செயலாளர் ஜெய்குமார் முன்னிலையில் பேண்டு வாத்தியங்கள் முழங்க மலர்மாலை, சால்வை அணிவித்து, ஆரத்தி எடுத்து மலர்தூவி மரியாதை செய்தும், இதே போன்று தூர்கா நகர் பகுதி துனை மேயர் இல்லம் அருகே முன்னாள் பேருராட்சி மன்ற தலைவர் கலைவாணி காமராஜ் மற்றும் வார்டு செயலாளர் பாலாஜி தலைமையில் பகுதி செயலாளர் ஜெய்குமார் முன்னிலையில் மலர்மாலை, சால்வை அணிவித்தும், ஆரத்தி எடுத்து பூசனிக்காய் உடைத்தும் மலர்தூவி உற்ச்சாக வரவேற்றனர் மகளிரணி இருவண்ணத்தில் கழக கொடி பொருந்திய பலூன்களை கையில் ஏந்தியும் உற்ச்சாக வரவேற்பு அளித்தனர். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமனோர் இருசக்கர வாகனத்தில் சென்றபடி வாக்கு சேகரித்தனர்



■ நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.நாகஜோதி அவர்களுக்கு தெற்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன் தலைமையில் பள்ளபட்டி ஆவரம்பட்டி விளாம்பட்டி மட்டப்பாறை ராமராஜபுரம் ஆகிய பகுதிகளில் ஐந்தாண்டு சாதனைகளை மக்களிடம் சொல்லி உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள்சேகரித்தனர் முன்னாள் கவுன்சிலர் லலிதா மணிகண்டன் துணை ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை எக்ஸ் . கவுன்சிலர். நெடுமாறன் எக்ஸ் கவுன்சிலர் தியாகு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர் அமாவாசை செல்லப்பாண்டி அஜித் ராஜேந்திரன் கண்ணா பேக்ஸ் பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, ஒசூரில், தமிழ்நாட்டிற்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங், தலைமையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் அனில் குமார் சிங்,சௌரவ் பாபு,பண்வே ராகுல் துக்காராம், செலவின பார்வையாளர்கள் சந்தோஷ் குமார்,சதீஷ், ராகுல் சிங்கானியா, காவல் பார்வையாளர் திருட்டிமான் சர்க்கார், மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சதினேஷ் குமார், ஆகியோர் முன்னிலையில் தேர்தல் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை,மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# புனித மகதலா மரியாள் கிறித்துவ ஆலயத்தில் திமுக சார்பில் வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப். 21-

மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் சோழவரம் ஒன்றிய குழு முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே.கர்ணாகரன் தலைமையில் செங்குன்றம் பாடியநல்லூர் புனித மகதலா மரியாள் கிறித்துவ ஆலயத்தில் ஜெப வழிபாடு முடிந்து வந்த வாக்காளர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திமுக நிர்வாகிகள் பரசுராமன், கார்த்திக், முகம்மதுஅலீ, ரமேஷ், முத்துமீரான், அந்துவான், திருமுருகன், ஜூலியன், மார்ட்டின், நாகராஜ், சிவசங்கரன், மணிகண்டன், பிரபு, வெற்றி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி யினர் கலந்துகொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்ரு2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு காவல்துறை தேர்தல் பார்வையாளர் அஸ்வதி தூர்ஜே,இ.கா.ப., மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார்,இ.ஆ.ப., ஆகியோர் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில்மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் பணியாளர்களின் பயன்பாட்டிற்காகக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியப் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் பணி யினை பார்வையிட்டனர்.

# தேனி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி ஏப். 21-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில்4.ச ட்டமன் றத்தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு வருகின்ற 23.04.2026 அன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையம் கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்கம் பொறி யியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு, வருகின்ற 04.05.2026 வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. அதனடிப்படையில், வாக்கு எண்ணும் மையத்தில் தபால்வாக்கு எண்ணும் அறைகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் தனித்தனியாக வைப்பதற்கான பாதுகாப்பு வைப்பறைகள், வாக்கு எண்ணுவதற்கான அறைகள், கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் தேர்தல் பணியாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் செல்லுவதற்கான வழித்தடங்கள் என இந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டு முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறதா என நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் தடையில்லா மின்சார வசதி, தேவையான குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முறையாக அமைக்கப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவு றுத்தினார்கள்இவ்வாய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) .காசி, உதவி இயக்குநர் (நில அளவை).அப்பாஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், உதவி செயற்பொறியாளர். சரவணக்குமார், வட்டாட்சியர் (தேர்தல்).சுருளி, வட்டாட்சியர் (தேனி) சதீஸ்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்–2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு காவல்துறை தேர்தல் பார்வையாளர்அஸ்வதி தூர்ஜே,இ.கா.ப., மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார்,இ.ஆ.ப., ஆகியோர் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில்மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் பணியாளர்களின் பயன்பாட்டிற்காகக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியப் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டனர்.





# காட்டுத்தலைவாசலில் இருசக்கர வாகனத்தில் வலம்வந்த டி.கே. பிரபு - உற்சாக வரவேற்பு!

காரைக்குடி, ஏப்.21-

காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டி.கே. பிரபு, காட்டுத்தலைவாசல் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இருசக்கர வாகனத்தில் அப்பகுதியின் அனைத்து தெருக்களிலும் வலம் வந்து, பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவை கோரினார். அவரை வரவேற்க அப்பகுதி இஸ்லாமிய பொதுமக்கள் தன்னிச்சையாக திரண்டு, பட்டாசு வெடித்து ஆரவாரம் செய்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டுஆதரவை வெளிப்படுத்தினர்.



■ இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா இ.ஆ.ப.. சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி, ரெண்டாடி ஊராட்சி குளத்தூர் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினர் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 குறித்து விழிப்புணர்வு ரங்கோலி கோலங்கள் வரைந்துள்ளதை பார்வையிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் அழைப்பிதழை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். உடன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் செல்வி, உதவி மகளிர் திட்ட அலுவலர்கள் வெங்கடேசன், அருண், திணேஷ், கஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



■ ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டம் அனத்தாங்கல் கிராமத்திலிருந்து கடப்பந்தங்கள் செல்லும் பொதுப் பாதையை சுமார் 150 ஆண்டுகளுக்கு மேல் அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வரும் நிலையில் ராஜேந்திரன் மகன் சத்யராஜ் மற்றும் சிவக்குமார் என்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வருவதாக கிராம மக்கள் சுமார் 20க்கும் மேற்பட்டோர் ஆற்காடு வட்டாட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளனர். மேலும் இதுகுறித்து கூறுகையில் அந்தப் பாதையை சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் பயன்படுத்தி வருவதாகவும் விவசாய நிலத்திற்கு செல்லும் பாதையை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் விவசாயம் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டி வருகின்றனர் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காளையார்கோவில் கிழக்கு ஒன்றியப் பகுதிகளில் கருணாஸ் தீவிர வாக்கு சேகரிப்பு

காளையார் கோவில் ஏப்.21-

சிவகங்கை மாவட்டம் புலியடிதம்மம். காட்டாத்தி . தென்றல் நகர் திருநாகர்,ரோஜா நகர்,விஜபி நகர்,துதி நகர் ,மருதுபாண்டியர் நகர் . செந்தமிழ் நகர் .கே .கே நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கருணாஸ் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்... காளையார்கோவில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் . காளையார்கோவில் ஒன்றிய மேனாள் தலைவர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட திமுக வினருக்கு ஒன்றிய பகுதிகளில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்..புலியடிதம்மம் . காட்டாத்தி உள்ளிட்ட பகுதிகளில் ஒன்றிய மாணவரணி அமைப்பாளரும் வழக்கறிஞருமான நற்புதம் சதீஷ்வரன் தலைமையில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

வேட்பாளர் கருணாஸ் க்கு பெண்கள் குலவையிட்டும் . கைத்தறியாடைகள் அணிவித்தும். பட்டாசு வெடித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்... இதனிடையே வேட்பாளர் கருணாஸ் பொதுமக்களுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டார்...





இதேபோல் காளையார்கோவில் தென்றல் நகரில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் தென்றல் நகர் சுரேஷ் மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் உதயநிதி குணா ஆகியோரது ஏற்பாட்டில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்... பொதுமக்கள் புடைசூழ ஜேவிபி இயந்திரம் மூலம் வேட்பாளர் கருணாஸ் மீது மலர்களை தூவியும் . பட்டாசு வெடித்தும். கைத்தறியாடை அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்..இதேபோல் காளையார்கோவில் மாந்தாளி கிளைக் கழக திமுக சார்பில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

கிளைக் செயலாளர். தொழிலதிபர் ஆர்.வி.எஸ். அரங்கநாதன் ஏற்பாட்டில் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் விஏஓ.முத்து முன்னிலையில் மலர் மாலை அணிவித்து. கைத்தறியாடை அணிவித்தும் வரவேற்றனர்... காளையார்கோவில் மில்கேட் அருகே காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் வனிதா கண்ணதாசன் தலைமையில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

இதில் வேட்பாளர் கருணாஸ் க்கு துணைச் செயலாளர் வனிதா கண்ணதாசன் சிற்ப்பு ஆரத்தி எடுத்தும் . பட்டாசு வெடித்தும். மலர்மாலை மற்றும் கைத்தறியாடை அணிவித்தும் வரவேற்றார்..ஒன்றிய செயலாளர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்ற இந்த வாக்கு சேகரிப்பின்போது ஒன்றிய துணைச் செயலாளர்களான வனிதா கண்ணதாசன். விஏஓ முத்து . மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை குரு.போஸ் . மேலமைப்பு பிரதிநிதி தொழிலதிபர் கண்ணதாசன் இளைஞரணி அமைப்பாளர் மாராத்தூர் முத்துப்பாண்டி . ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் நற்புதம் வழக்கறிஞர் சதீஷ்வரன் . ஒன்றிய மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ரோஸ்லின் . ஒன்றிய சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சிறிய புஷ்பம் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய இளைஞரணி துரை.கண்ணன். . மோகன் ,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்களான தென்றல் நகர் சுரேஷ் . உதயநிதி குணா உள்ளிட்ட திமுகவினர் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்...

# ஏலகிரி மலையில் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணி தீவிர வாக்கு சேகரித்து வந்தார்

ஜோலார்பேட்டை, ஏப்.21-

ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் ஏலகிரி மலைக்குட்பட்ட முத்தானூர், கொட்டையூர், புங்கனூர், மஞ்சங்கொள்ளி புதூர், குட்டேரி வட்டம், நிலாவூர், அத்தனாவூர், மங்களம், தாயலூர் போன்ற 14 கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார்.

ஜோலார்பேட்டை தொகுதி திமுக வேட்பாளராக என்னை நிறுத்தியுள்ளார்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து எனக்கு ஆதரவு தர வேண்டும் நான் இந்தப் பகுதியில் உயர் மின் கோபுர மின்விளக்கு அமைக்கவும் இங்குள்ள பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கவும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கிணறு வெட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும் என பல வாக்குறுதிகளை வழங்கி பிரச்சாரம் செய்தார். உடன் ஏலகிரி மலை முன்னாள்



ஊராட்சி மன்ற தலைவர் சி.பொன்னரங்கம், மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர், தலைமைக் கழக பேச்சாளர் மேகநாதன், கூட்டணி கட்சி தேமுதிக மாவட்ட பொருளாளர் ஆஞ்சி, ஒன்றிய செயலாளர் அண்ணாமலை, துணைத் தலைவர் திருமால், கவுன்சிலர்கள் லட்சுமி செந்தில், தனலட்சுமி சங்கர் மகளிர் அணி துணை அமைப்பாளர், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் அருண்பாண்டியன், இளைஞரணி ஒன்றிய துணை அமைப்பாளர் டி.ராஜ்குமார், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் ராஜ் குமார், ஆதிதிராவிடர் நல குழு ஒன்றிய துணை அமைப்பாளர் கோவிந்தராஜ், விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய துணை அமைப்பாளர் ராகுல், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பிரம்மாண்டமான பட்டாசு வெடித்து ஆரத்தி எடுத்து மலர் தூவி வரவேற்று பிரமாண்டமாக வாக்கு சேகரித்தனர்



# பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு கிராமம் ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலய மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், ஏப்.21-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் அருளோடு பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ தர்மதாஸ்தா ஆலய நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் மற்றும் ஐயப்பன் பக்தர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியில் பந்தக்கால் நடுதல், விக்னேஷ்வரபூஜை, தனபூஜை, கோபூஜை, சங்கல்பம், கணபதி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், வாஸ்துசாந்தி, யாகசாலை பிரவேசபலி, அங்குரார்ப்பணம், துவாரபூஜை, நாடிசந்தானம், பூர்ணாஹீதி, சதுர்வேத பாராயணம் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது.பின்னர் மேளதாளத்துடன் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை சாஸ்திரிகள் கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதணைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீர் தெளித்தனர். பின்னர் மூலர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் கூட்டணி கட்சி தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன் தீவிர வாகனம் பிரச்சாரம்

பல்லாவரம் ஏப். 21-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் திமுக கூட்டணியின் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன், பல்லாவரம் சட்டமன்றத் உறுப்பினர் இ.கருணாநிதி, 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் வாகனத்தில் நின்று உங்கள் வேட்பாளர் அனகை முருகேசன் உங்களது சின்னம் முரசு அனைத்து வார்டுகளில் உள்ள பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர். பிரச்சாரத்தின் போது பல்லாவரம் வடக்கு பகுதி



இளைஞரணி துணை அமைப்பாளர் முரசொலி பா.ராஜன் ஏற்பாட்டில் மலர்மாலை மற்றும் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மதிமுக மாவட்ட செயலாளர் மா.வை.மகேந்திரன், 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் மங்கையர் திலகம் ராஜ்குமார், 14வது வட்டக் கழகச் செயலாளர் பி.ராஜ்குமார், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், பல்லாவரம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் சரத் வெங்கடேசன், மகளிர் அணி துணை அமைப்பாளர் கலா மணிமாறன் , 159(BLA2) தலைவர் என்.பிரபு, இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக் மற்றும் துணை அமைப்பாளர்கள வி.யுவனாஷ் மற்றும் வி.பிராங்கிளின் மாணவரணி துணை அமைப்பாளர் எஸ்.இ.ஹேம் குமார் மற்றும் கே.கௌதம் 14வது வார்டு வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கழக கொடியுடன் ஏந்தியவாறு இருசக்கர வாகனத்தில் முரசு சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுகொண்டு பேரணியாக சென்றனர்.



# சிவகங்கையில் புதியதோர் உதயம்



சிவகங்கை. 21-

சிவகங்கை மரக்கடை வீதியில் 20 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக இயங்கி வந்த சபரி சாஸ்தா எலக்ட்ரிகல் இப்பொழுது புதுப்பொலிவுடன் புத்துயிர் பெற்று சிறப்பாக மென்மேலும் வளர வேண்டும் என்று எலக்ட்ரீசியன் சங்கத்தார் மற்றும் சிவகங்கை மாவட்ட எலக்ட்ரிஷன்கள் மனதார வாழ்த்தி சென்ற தருணம் மிகப் பழமை வாய்ந்த சிவகங்கை சபரி சாஸ்தா எலக்ட்ரிகலில் இல்லங்களுக்கு தேவையான அனைத்து விதமான எலக்ட்ரிக்கல் பிளம்பிங் சாமான்கள் குறைந்த விலையிலும் தரமாகவும் சிறப்பாக வழங்கிவருகின்றனர், இவர்கள் கிராம்டன் பம்புகளால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் கிராம்டன் சம்பந்தமான அனைத்து பொருட்களும் குறைந்த விலையில் கம்பெனியின் நேரடி வாரண்டியுடன் இங்கு கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றனர் சபரி சாஸ்தா உரிமையாளர் லதா சரவணன் அவர்களை மென்மேலும் உயர வேண்டும் என்று மாலை தந்தி நாளிதழ் குடும்பம் வாயிலாக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் சுதா வர்மா, சரிகா மோகன், தர்மேந்திர சிங், தினேஷ் ஸ்ரீ வத்சவா,தேர்தல் செலவின பார்வையாளர்கள் மொசுகண்டி கங்காதர் சச்சின் குமார் சிங்,நிலாய் பங்கர், சுனில் என் ரனோட் சத்ய நாராயணன் தக்கர், தேர்தல் காவல் பார்வையாளர்; ராகுல் ஹெக்டே இ.கா.ப. ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் தேர்தல் பணி தொடர்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன், மாநகர காவல் ஆணையாளர் ராஜேந்திரன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக் மாநகர காவல் துணை ஆணையர்கள் தீபா சத்யன் இ.கா.ப., பிரவீன் கௌதம் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சங்க மித்திரை ஆகியோர் உள்ளனர்.


Format C-1
(for candidate to publish in the newspapers, TV)
Declaration about criminal cases
(As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

PUBLIC DECLARATION

I, **Rubin Antony**, aged 30, S/O Selvan, No. 13/94, Kalluvettankuzhi, Nithiravilai, Kanyakumari Dit-69154, hereby declare that I am contesting a as a candidate of **TAMIZHAGA VAZHVURIMAI KATCHI** for 234, Killiyoor Constituency in the Tamil Nadu Legislative Assembly Election to be is held on 23.04.2026. I inform that the following cases line (and Inform that the following cases are pendi against me:

| Sl. No. | FIR No. & Police Station | Date of Filing | Case No. | Section(s) |
|---|---|---|---|---|
| 1 | 77/2021 Kollangode | Date of Filing | SC.13/2022 District Court, Kuzhithurai | 147,148,149,294(b), 323,324,307,506(ii) IPC 402 TNPWHA |
| 2 | 40/2022 Nithiravilai | 19/11/2025 | STC.1419/2022 Court, Kuzhithurai Kuzhithurai | 147, 294(b) 323, 341, 506(i) IPC |
| 3 | 133/2023 Nithiravilai | 06/01/2024 | STC.1092/2023 Court, Kuzhithurai | 4A (la) of TN open place (Prevention of |
| 4 | 134/2023 Nithiravilai | 06/01/2024 | STC.1093/2023 Court, Kuzhithurai | 4A (la) of TN open place (Prevention of |

SECTION B: DETAILS OF CONVICTION

| Sl. No. | Name of Court | Date(s) of Order(s) | Description of Offence(s) & Punishment Imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil | Nil |

**RUBIN ANTONY, KILLIYOOR CONSTITUENCY TAMIZHAGA VAZHVURIMAI KATCHI CANDIDATE


# திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் மனிஷ் நார்னரே. சட்டமன்றத் தேர்தலைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்

திருப்பூர் ஏப்.21-

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்.2026. நடைபெறுவதையொட்டி. மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் நேற்று (19.04.2026) திருப்பூர் மாநகராட்சி, ஸ்ரீசக்தி திரையரங்கம் அருகில் சிலம்பம் நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இரு சக்கர வாகன பேரணி மற்றும் காயத்ரி ஹோட்டல் வளாகத்தில் பெண்கள் கபாடி போட்டியினை துவக்கி வைத்து தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை பார்வையிட்டார்கள்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி( தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, ஸ்ரீசக்தி திரையரங்கம் அருகில் சிலம்பம் நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இரு சக்கர வாகன பேரணி மற்றும் காயத்ரி ஹோட்டல் வளாகத்தில் பெண்கள் கபாடி போட்டி போன்ற பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்று தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, ஜெய்வாபாய் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மற்றும் மாதிரி வாக்குப்பதிவினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வின்போது, திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி.ஹர்ஷா அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.





## மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக் கூட்டம்

மதுரை, ஏப்.21-

தமிழ்நாட்டில் சட்டமன்றத் பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக் கூட்டம் காவல்துறை தேர்தல் பார்வையாளர் அஸ்வதி தூர்ஜே,இ.கா.ப., தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் சமர்த் வர்மா, இ.ஆ.ப.,(188 மேலூர் மற்றும் 189 மதுரை கிழக்கு), வேத் பதி மிஸ்ரா, இ.ஆ.ப.,(190 சோழவந்தான், 197 உசிலம்பட்டி), அந்தரா ஆச்சார்யா, இ.ஆ.ப.,(191 மதுரை வடக்கு, 194 மதுரை தெற்கு),தினேஷ் குமார், இ.ஆ.ப.,(193 மதுரை மத்திய, 194 மதுரை மேற்கு), மிங்மா டி. ஷெர்பா (195-திருப்பரங்குன்றம் மற்றும் 196-திருமங்கலம்)தேர்தல் செலவினப் பார்வையாளர்கள்மரு .புற நாக சந்தீப்,இ.வ.ப.,(188 மேலூர்),மணிஷ் குமார் மீனா,இ.வ.ப.,(189 மதுரை கிழக்கு), அபர்ணா வில்லூரி,இ.வ.ப.,(190 சோழவந்தான்),தாரிக் மபூத்,இ.வ.ப.,(191 மதுரை வடக்கு), கிருத்திகா ஜெய்ஸ்வால்,இ.வ.ப.,(192 மதுரை தெற்கு), லைனா பாலன்,இ.வ.ப.,(193 மதுரை மத்திய),பால்முகுந்த்,இ.வ.ப.,(194 மதுரை மேற்கு, 195 திருப்பரங்குன்றம்),திரு.ஒட்டோ குகாஷே யெபுதோமி,இ.வ.ப.,(196 திருமங்கலம், 197 உசிலம்பட்டி) ஆகியோர் தலைமையில்மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர்கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப.,,மாநகர காவல் ஆணையாளர் அபிஷேக் தீக்சித்,இ. கா.ப., ,மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் இ.ஆ.ப., ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ.கா.ப., ஆகியோர் முன்னிலையில்மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

## தேர்தலை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பரபரப்பு அறிவிப்பு

சிவகங்கை, ஏப்.21-

சிவகங்கைமாவட்டம்தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, 21 .04.2026 முதல் 23 .04. 2026 வரை மூன்று நாட்கள் மற்றும் 04.05.2026 வாக்கு எண்ணிக்கை நாளன்றும், காலை 10.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை , அரசு மதுபானக் கடைகள், FL1, FL2, FL3 உரிமம் பெற்ற ஹோட்டல்கள் மற்றும் மனமகிழ் மன்றங்கள் ஆகியவை



முழுவதுமாக மூடப்படும் -மாவட்ட ஆட்சியர் பொற்கொடி அறிவித்துள்ளார்.



## வெயிலின் தாக்கம்: அழகர் கோவிலில் பக்தர்களுக்கு நீர், மோர், பானகம் வழங்கல்

மதுரைஏப்.21-

மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் கடும் வெயிலின் தாக்கத்தை முன்னிட்டு சுவாமி தரிசனம் செய்ய வருகை தரும் பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இணை ஆணையர் ஹரிஹரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஏற்பாட்டின் கீழ், பக்தர்களுக்கு தண்ணீர், மோர் மற்றும் பானகம் வழங்கப்பட்டு வெப்பத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பெரிய அளவில் திரளாக வரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த சேவை, பக்தர்களால் பாராட்டப்பட்டது.

# தேர்தல் பறக்கும் படையினரின் அதிரடி சோதனை: சிவகங்கையில் ₹37.32 லட்சம் பறிமுதல்

சிவகங்கை ஏப்.21-

தமிழக சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பணம் பறிமுதல் விவரம்: நேற்று முன்தினம் (19/04/2026) சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், நிர்வாக மாஜிஸ்திரேட் மற்றும் பறக்கும் படைத் தலைவர் கோ. சுந்தர பெருமாள் தலைமையிலான குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது உரிய ஆவணங்களின்றி



கொண்டு செல்லப்பட்ட ரூ. 37,32,257.08 (முப்பத்து ஏழு லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஏழு ரூபாய் எட்டு பைசா மட்டும்) ரொக்கப் பணத்தைக் கைப்பற்றினர். இந்தப் பணம் கி. சரவணக்குமார் என்பவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாக மகஜர் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கருவூலத்தில் ஒப்படைப்பு: கைப்பற்றப்பட்ட ரொக்கப் பணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட பை, சிவகங்கை சார்நிலை கருவூலத்தில் (Sub-Treasury) பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டது. இதற்கான ஒப்புதல் சீட்டினை உதவி கருவூல அலுவலர் வழங்கியுள்ளார்.

மேல்முறையீடு குறித்த தகவல்:பறிமுதல் செய்யப்பட்ட இந்தப் பணம் தொடர்பாக உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துத் திரும்பப் பெற விரும்புவோர், 7 நாட்களுக்குள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரை அணுகி மேல்முறையீடு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.தேர்தல் நேரத்தில் அதிகப்படியான ரொக்கப் பணம் பிடிபட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161